11. அறிவிப்புகள்

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப் படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1993 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1993). இதனைப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

(ஈ) பரம்பிக்குளம்— ஆளியாறு திட்ட (நீர்வழங்குகையை முறைப் படுத்துதல்) சட்டமுன்வடிவு, 1993

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம்— ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1993), மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு பரம்பிக்குளம்— ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/1993) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்— ஆளியாறு பாசனத் திட்டத்திலே விரிவாக்கப் பகுதி விவசாயிகள் கடந்த 10 ஆண்டுக் காலமாக தங்கள் பகுதியிலே வாய்க்கால்கள் வெட்டப்பட்டி

@28—4—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.